Crl.Misc.39

# D E P O S I T I O N  O F  W I T N E S S

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.195/2023

**P.W**.7(LW7)

| | |
|---|---|
| Name | : திரு.குமார் |
| Father/Husband Name | : திரு.தெய்வநாதன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

1, 2 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.05.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது நெய்குப்பி கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி தமிழ்செல்வன் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் இரண்டு ஒப்புதல் வாக்குமூலத்திலும் உள்ள முதல் கையெழுத்து மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான்.

கடந்த 2017ம் வருடம் டிசம்பர் மாதம் ஒரு நாள் நானும் தமிழ்செல்வனும் வெங்கம்பாக்கத்தில் வண்டிக்கு பெட்ரோல் போட்டுவிட்டு ஊருக்கு திரும்பும் போது வெங்கம்பாக்கம் பேருந்து நிலையம் அருகே போலிசார் விசாரணை செய்துக் கொண்டிருந்தார்கள். அப்போது என்னையும் தமிழ்செல்வனையும் சாட்சியாக இருக்கும் படி கேட்டுக் கொண்டார்கள். வெங்கம்பாக்கம் பேருந்து நிலையத்தில்

போலிசார் ஆஜர் எதிரிகள் இரண்டு பேரையும் தான் விசாரணை செய்துக் கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரிகளிடமிருந்து மதியம் சுமார் 1 மணி அளவில் தங்க செயின், மாட்டல் மற்றும் பல தங்க நகைகள் வெங்கம்பாக்கம் பேருந்து நிலையத்தில் வைத்து கைப்பற்றினார்கள். அதன் பின்னர் போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் காவல் நிலையம் சென்று கையொப்பம் செய்தோம். (**இரண்டு ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள முதலாவது கையெழுத்துக்கள் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் கையெழுத்துக்களை எந்த இடத்தில் வைத்து போட்டேன் என்றால், ஒரு முறை காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். மற்றொரு கையெழுத்து செங்கல்பட்டு ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். நான் எதற்காக கையெழுத்து செய்தேன் என்கிற விவரம் எனக்கு தெரியுமா என்றால் போலிசார் சொன்னார்கள். நான் வெங்கம்பாக்கத்தில் வைத்து போலிசார் விசாரணை செய்ததன் பேரில் கையொப்பம் செய்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் ஆஜர் எதிரிகளிடமிருந்து எந்த ஒரு நகைகளையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அந்த நகைகள் யாருடைய நகைகள் என்கிற விவரம் எனக்கு தெரியாது.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.